**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/s. KMB GRANITE ENTERPRISES COLOUR GRANITE QUARRY, SF.NO.609A(PART) (BIT-2), LEASE OVER AN EXTENT OF 4.10.0 HA AT NAGOJANAHALLI VILLAGE, POCHAMPALLI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 07.01.2025 AT 11.00 AM AT M/s. SRI SHAKTHI MAHAL, THIRUPPATTUR MAIN ROAD, VADAMALAMPATTI, POCHAMPALLI, KRISHNAGIRI DISTRICT**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.N.Shajahan | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. C.Muthuraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. M.Silambarasan | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru.Mohammed Yasin | : | The Proprietor M/s. KMB Granite Enterprises Colour Granite Quarry |
| 5 | Thiru.K.Vijaya Raghavan | : | EIA Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri |
| 6 | Public | : | 126 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri District (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for

the proposed M/s. KMB Granite Enterprises Colour Granite Quarry, SF.No. 609A(Part) (Bit-2), lease over an extent of 4.10.0 Ha at Nagojanahalli Village, Pochampalli Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinamalar" and "The New Indian Express" dated 03.12.2025 and pamphlets regarding public hearing was issued to the public of Nagojanahalli Village, Chennaiyarampatti Village and Tattakkal Village and with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and proceeding of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Revenue Divisional Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed Colour Granite quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.K.Vijaya Raghavan, EIA Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri of the proposed Colour Granite quarry project has made presentation about the proposed Colour Granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Colour Granite quarry project.

The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Kadalvendan, Thattakkal Village (Former Councilor):**

Mr. Kadalvendan stated that he had rushed to the meeting as he became aware of it only a short while ago through a WhatsApp message. He mentioned that he had previously submitted a petition regarding this quarry during a public hearing held at Thattakkal. While officials claimed that the meeting was advertised in newspapers, he alleged that the advertisements regarding the ongoing public hearing were not properly announced. He further charged that, based on his inquiries, no formal notification had reached the local public. Furthermore, he asserted that the people currently participating in the meeting were not local residents belonging to the Nagojanahalli Town Panchayat.

He also added that he did not understand the basis on which this meeting was being conducted. He pointed out that while there are suitable halls available locally to hold such a hearing, it was being conducted "secretly" in Pochampalli instead. He also stated his belief that officials were complicit in this matter. He accused them of failing to provide proper public notice to everyone and instead merely distributing flyers in one location and taking photographs for the sake of documentation.

He stated that water stagnating in already excavated quarries is obstructing the natural flow of water to the lakes, which results in agriculture being adversely affected during drought periods. He further noted that due to the quarrying operations, peacocks and other birds living in the hills are being forced into residential village areas. For future projects, he requested that public hearing meetings be conducted locally (in Nagarasampatti, Velampatti, or Thattakkal). He pointed out that even when explosives are detonated within the prescribed limits in existing quarries, the excessive noise and vibrations are causing cracks in nearby houses. Therefore, he stated his opposition to this quarry project on behalf of the local people and warned that if the project moves forward, he will mobilize the public to launch a protest.

2. **Thiru. Samu, Thattakkal Village (Circle Secretary - Communist Party of India (Marxist)):**

Thiru. Samu stated that he had submitted a petition to the District Collector in September of last year opposing the establishment of this quarry. He questioned why the Government is showing such intense interest and urgency in implementing this quarry project. Furthermore, he asserted that the people participating in this meeting are not local residents. He raised a question regarding whose interests the officials are actually supporting. He noted that his previous petition highlighted various grievances, including environmental degradation and the negative impact on agriculture. He alleged that the meeting was being conducted without any formal notification to the local public. He declared his opposition to the quarry project in the interest of the welfare of farmers and the general public. Additionally, he urged the authorities to conduct another public hearing in Nagojanahalli after providing proper and formal notice to the residents. He concluded by emphasizing that officials should act in support of the public rather than working against them.

Following this, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, asked if any other members of the public wished to express their views. He further stated that they could also submit their opinions in writing or send them either through post or email.

**Thiru. Kadalvendan, Thattakkal Village (Former Councilor), spoke again:**

When expressing his views for the second time, Mr. Kadalvendan stated that all the members of the public attending this hearing were outsiders. He emphasized that only the local residents truly understand the problems related to the quarry. Therefore, he requested that another public hearing be conducted specifically within the local area.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of

the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 4 number of petitions were received on the proposed M/s. KMB Granite Enterprises Colour Granite Quarry project during the public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, from the public and no E-mail representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, on the proposed Colour Granite quarry project.

List of publics attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Revenue Divisional Officer**
**Krishnagiri**

**District Collector**
**Krishnagiri**

**கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், நாகோஜனஹள்ளி கிராமம், புல. எண். 609A (பகுதி) (Bit 2) உத்தேசிக்கப்பட்ட வண்ண கிராணைட் குவாரி – சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 07.01.2026 அன்று, முற்பகல் 11.00 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், வடமலம்பட்டி கிராமம், திருப்பத்தூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தி /ள். ஸ்ரீ சக்தி மஹால் கல்யாண மண்டபத்தில் – நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விவரங்கள்:**

**திட்ட விவரங்கள்:**

| வ. எண் | முன்மொழியப்பட்ட குவாரியின் பெயர் மற்றும் இடம் | குவாரியின் அளவு (ஹெக்டேர்) |
|---|---|---|
| 1. | தி/ள்.கே.எம்.பி கிராணைட் எண்டர்பிரைசஸ் வண்ண கிராணைட் குவாரி, புல. எண். 609A (பகுதி) (Bit 2), நாகோஜனஹள்ளி கிராமம், போச்சம்பள்ளி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். | 4.10.0 |

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.நா.ஷாஜகான் | : | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. செ.முத்துராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er. மு.சிலம்பரசன் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. முகமது யாசின் | : | உரிமையாளர், தி/ள்.கே.எம்.பி கிராணைட் எண்டர்பிரைசஸ் வண்ண கிராணைட் குவாரி. |
| 5 | திரு.க.விஜயராகவன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி |
| 6 | பொதுமக்கள் | : | 126 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது). |

தி/ள்.கே.எம்.பி கிராணைட் எண்டர்பிரைசஸ் வண்ண கிராணைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு

கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம், பொதுமக்கள் மற்றும் தி/ள்.கே.எம்.பி கிரானைட் எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான தினமலர் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் 03.12.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், நாகோஜனஹள்ளி கிராமம், சென்னியராம்பட்டி கிராமம், தட்டக்கல் கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள வண்ண கிரானைட் குவாரிக்கு உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் வண்ண கிரானைட் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள், பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர்,

தி/ள்.கே.எம்.பி கிரானைட் எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள்.கே.எம்.பி கிரானைட் எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.க.விஜயராகவன் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி. அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று வண்ண கிரானைட் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு . கடல்வேந்தன், தட்டக்கல் கிராமம் (முன்னாள் கவுன்சிலர்) :**

திரு. கடல்வேந்தன் அவர்கள், தான் அவசர அவசரமாக இக்கூட்டத்திற்கு வந்து இருப்பதாகவும், இது குறித்த தகவல் சிறிது நேரத்திற்கு முன்பாக வாட்சப் செயலி மூலமாக மட்டுமே தெரியவந்தது என்று கூறினார். இக்குவாரி தொடர்பாக ஏற்கனவே தட்டக்கல்லில் நடந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் மனு

அளித்ததாக தெரிவித்தார். இக்கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவது குறித்து பத்திரிக்கை விளம்பரம் செய்துள்ளதாக கூறுகிறீர்கள், ஆனால் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் குறித்த விளம்பரங்கள் முறையாக அறிவிப்பு செய்யப்படவில்லை எனவும், தான் விசாரித்த வரையில் உள்ளூர் பொதுமக்களுக்கு கருத்து கேட்பு கூட்டம் பற்றிய எந்த அறிவிப்பும் போய் சேரவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.மேலும் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ள பொதுமக்கள் அனைவரும் நகோஜனஹள்ளி பேரூராட்சிக்குட்பட்ட உள்ளூர் பொதுமக்கள் இல்லை என்று கூறினார். இக்கருத்து கேட்பு கூட்டம் எதன் அடிப்படையில் நடைபெறுகிறது என்று தெரியவில்லை என தனது ஆதங்கத்தை தெரிவித்தார். உள்ளூரில் இக்கருத்து கேட்பு கூட்டம் நடத்த உரிய மண்டபங்கள் இருப்பதாகவும், ஆனால் அங்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தாமல் ரகசியமாக போச்சம்பள்ளியில் நடத்துவதாக கூறினார். அதிகாரிகளும் இதற்கு உடந்தையாக இருப்பதாகவும் தான் எண்ணுவதாக கூறினார். முறையாக அனைவருக்கும் விளம்பர அறிவிப்பு செய்யாது, ஓரிடத்தில் மட்டும் பெயரளவில் துண்டு பிரசுரங்களை வழங்கி புகைப்படம் எடுத்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

ஏற்கனவே வெட்டப்பட்ட குவாரிகளில் நீர் தேங்குவதால் ஏரிக்கு நீர் வரத்து தடைப்படுகிறது இதனால் வறட்சி காலங்களில் விவசாயம் பாதிப்படைவதாக தெரிவித்தார். மலையில் வாழும் மயில்கள் மற்றும் பறவைகள் குவாரி பணியினால் ஊர் பகுதிக்கு வருவதாகவும் தெரிவித்தார். இனிவரும் காலங்களில் குவாரிகளுக்கு கருத்து கேட்பு கூட்டத்தை உள்ளூரில் (நாகரசம்பட்டி, வேலம்பட்டி, தட்டக்கல்) நடத்துமாறு கேட்டுக்கொண்டார். ஏற்கனவே உள்ள குவாரிகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வெடி வெடித்தால் கூட அதிகப்படியான ஒலியும் அதிர்வுகளும் அவற்றால் வீடுகளில் விரிசல்களும் ஏற்படுவதாக தெரிவித்தார். எனவே இக்குவாரி திட்டத்தை உள்ளூர் மக்கள் சார்பாக எதிர்ப்பதாக

கூறினார், இக்குவாரி திட்டம் அமைந்தால் மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்த போவதாக தெரிவித்தார்.

**2. திரு. சாமு தட்டக்கல் கிராமம் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி – வட்ட செயலாளர்):**

திரு. சாமு அவர்கள், இக்குவாரி அமைவதை எதிர்த்து மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கடந்த ஆண்டு ஒன்பதாம் மாதம் மனு அளித்துள்ளதாக தெரிவித்தார். தற்போது இக்குவாரி திட்டம் அமைப்பதில் அரசாங்கம் ஏன் இவ்வளவு முனைப்பு காட்டுகிறது என தெரியவில்லை என்று கூறினார். மேலும் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ள பொதுமக்கள் அனைவரும் உள்ளூர் பொதுமக்கள் இல்லை என்று கூறினார். அதிகாரிகள் யாருக்கு துணை போகிறார்கள் என்று தெரியவில்லை என கேள்வி எழுப்பினர். மேற்கூறிய மனுவில் சுற்றுசூழல் பாதிப்பு, விவசாயம் பாதிப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளதாக தெரிவித்தார். உள்ளூர் பொதுமக்களுக்கு கருத்து கேட்பு கூட்டம் பற்றிய எந்த அறிவிப்பும் செய்யாமல் கூட்டம் நடத்துவதாக கூறினார். விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இக்குவாரி திட்டத்தை எதிர்ப்பதாக தெரிவித்தார். மேலும் நகோஜனஹள்ளியில் பொதுமக்களுக்கு முறையாக அறிவிப்பு செய்து இன்னொரு கருத்துகேட்பு கூட்டம் நடத்துமாறும் வலியுறுத்தினார். அதிகாரிகள் பொதுமக்களுக்கு எதிராக செயல்படாமல் துணையாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஓசூர் அவர்கள், பொதுமக்களில் வேறு யாரும் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கிறீர்களா என்றுக்கேட்டார். மேலும் தங்கள் கருத்துக்களை எழுத்து வடிவிலும் தெரிவிக்கலாம், அஞ்சல் மூலமாகவும் அல்லது மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பலாம் என்றும் கூறினார்.

**மீண்டும் திரு . கடல்வேந்தன் தட்டக்கல் கிராமம் (முன்னாள் கவுன்சிலர்):**

திரு. கடல்வேந்தன் அவர்கள் மீண்டும் இரண்டாவது முறையாக தன் கருத்தை கூறும்போது, இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் அனைவரும் வெளியூர் மக்கள் எனவும் உள்ளூர் பொது மக்களுக்கு மட்டுமே குவாரி சார்ந்த பிரச்சனைகள் தெரியும் எனவும், எனவே இன்னொரு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை உள்ளூரில் நடத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை :**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.கே.எம்.பி கிரானைட் எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 04 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள்.கே.எம்.பி கிரானைட் எண்டர்பிரைசஸ் வண்ண கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

15

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

22/01/26

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

**வருவாய் கோட்டாட்சியர்**
**கிருஷ்ணகிரி**

3/7

22/1/26

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**

3/7